**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 202/2012 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திருமதி. முகமது மீராள் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of September 2022.

நான் மூலைக்கரைப்பட்டியில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கின் மற்ற எதிரி கணபதியை தெரியும். வழக்கின் 1வது எதிரி கணபதியின் கிணறும், என்னுடைய கிணறும் அருகில் உள்ளது. நடுவில் பாதை உள்ளது அந்த பாதையில் கணபதி குழியை தோண்டி நான் கிணற்றுக்கு செல்லாதவாறு கடந்த 17.03.2011 ஆம் தேதி தடுத்தார். சம்பவம் நடக்கும் போது மாலை 06.00 மணி இருக்கும். நான் ஏன் இவ்வாறு குழி தோண்டுகிறீர்கள் என்று 1 வது எதிரியிடம் கேட்டேன். என் முதுகை பிடித்து கீழே தள்ளினார். நான் கீழே விழுந்துவிட்டேன்.

ஆஜர் 3-வது எதிரி கம்பியால் என் தம்பி அபுபக்கர் சித்திக்கின் மூக்கில் குத்தி இரத்த காயம் ஏற்படுத்தினார். என்னை இங்கிருந்து செல்லாவிட்டால் உன் கொண்டையை பிடித்து இழுத்து அறுத்துவிடுவேன் என்று சொல்லி தகாத வார்த்தையால் திட்டினார். ஆஜர் 2- வது எதிரி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார். பின்னர் நானும், எனது தம்பியும் ஆட்டோவில் ஐகிரவுண்ட் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். இரண்டு நாட்கள் சிகிச்சையில் இருந்தேன்.

சிகிச்சை முடிந்து மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். காட்டப்படும் புகார் மனு நான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டு, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.